<u>**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI**</u>

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC.217/2020**

| Deposition of Name | ஹேமலதா –310 | Prosecution | LW–10 as PW–7 |
|---|---|---|---|
| Father Name | க/பெ.ரவிச்சந்திரன் | Defence | |
| Station | புதுப்பட்டினம் PS | Taluk | சீர்காழி |
| District | மயிலாடுதுறை | Age | /2026 |

Solemnly affirmed by Tmt.R. Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day

<u>25.02.2026 **எதிரிகள் ஆஜர்**</u>

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது.**

**முதல் விசாரணை**

**1.** நான் தற்போது புதுப்பட்டினம் காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கு சமயத்தில் பணிபுரிந்த உதவி ஆய்வாளர்கள் ஜெயபால் மற்றும் ராஜேந்திரன் அவர்களின் கையெழுத்தும், கையொப்பாமும் நான் நன்கு அறிவேன். ஆவணங்களின் அடிப்படையில் இந்த வழக்கில் அவர்களுக்காக கூடுதல் சாட்சியம் அளிக்கிறேன்.

2. கடந்த 17.06.2019ம் தேதி பகல் 14.00 மணிக்கு உதவி ஆய்வாளர் ஜெயபால் நிலைய பொறுப்பில் இருந்த போது சீர்காழி அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த அய்யப்பன் என்பவரை விசாரணை செய்து நிலையம் வந்து 14.00 மணிக்கு புதுப்பட்டினம் காவல்நிலைய குற்ற எண்.104/2019 இ.த.ச பிரிவுகள் 294(b), 323, 506(i) ஆக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **அந்த முதல் தகவல் அறிக்கை அ.சாஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3. வழக்கு கோப்புகளை மேல் விசாரணைக்காக உதவி ஆய்வாளர் பார்வைக்கு வைத்ததை உதவி ஆய்வாளர் எடுத்துக் கொண்டு கடந்த 17.06.2019ம் தேதி 14.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் சக்திமுருகன் மற்றும் தமிழன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். மேற்படி **ஆவணங்கள் அ.சாஆ 3 மற்றும் 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பட்டியல் சாட்சிகள் 1 முதல் 6 வரையிலானவர்களை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

4. வழக்கின் எதிரியை தேடிய நிலையில் கடந்த 17.06.2019ம் தேதி 16.30 மணிக்கு எதிரி ராஜேந்திரன் என்பவரை பன்னீர்கோட்டம் செக்போஸ்ட் பஸ் ஸ்டாப் அருகே நின்று கொண்டிருந்தவரை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார். 2வது எதிரி கிஷோர் குமார் நாகப்பட்டினம் மாவட்டம் அமர்வு நீதிமன்றத்தில் முன் பிணை பெற்றிருந்ததால் அவரை கைது செய்யவில்லை. புகார்தாரருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் கார்த்தி அவர்களை விசாரணை செய்துவாக்குமூலம் பெற்று அவரிடமிருந்து காயச்சான்றினை பெற்றுள்ளார். **அந்த காயச்சான்று அ.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மருத்துவர் கொடுத்த காயச்சான்றின்படி இவ்வழக்கு சட்டப்பிரிவுகளான** 294(b), 323, 506(i) இ.த.சவிலிருந்து 294(b), 325, 506(i) இ.த.சாவாக சட்டப்பிரிவு மாற்றம் செய்துள்ளார். அந்த சட்டப்பிரிவு மாற்று அறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 02.07.2019 ஆம் தேதி இந்த வழக்கு விசாரணை முடித்து எதிரிகளுக்கு எதிராக இதச பிரிவுகள் 294(b), 325, 506(i)ன் கீழ் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் ஆவணத்தின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். சம்பவம் 04.05.2019 ந்தேதி இரவு 8.30 மணிக்கு நடைபெற்றது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை 17.06.2019 அன்றுதான் போடப்பட்டது என்றால் சரிதான். மனு எண்.109/2019 விசாரணை செய்து வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. சுமார் 45 நாட்கள் கால தாமதமாக FIR போடப்பட்டது என்றால் சரிதான். கால தாமதத்திற்கு என்ன காரணம் என்று முதல் தகவல் அறிக்கை காலம் 8ல் கூறப்பட்டுள்ளதா என்றால் கூறப்படவில்லை.

அசா.1 தனது புகார் வாக்குமூலத்தில் எதிரிகள் இரும்பு கம்பியால் தாக்கியதாக கூறினார்கள் என்றால் சரிதான். 161 Statement யில் கருவை குச்சியால் அடித்தார்கள் என்று கூறப்பட்டுள்ளது. அசா.1 தாக்கப்பட்டதாக சொல்லப்படும் எந்த ஆயுதத்தையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை

என்றால் சரிதான். அசா.1க்கு தலையில் அடிப்பட்டதற்கான மருத்துவ சான்றிதழ் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட வில்லை என்றால் சரிதான். அசா.1 புகார் வாக்குமூலத்தில் அவருக்கு கையில் அடிபட்டதாக கூறவில்லை என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்தில் 24 வது வரியில் எங்களிடம் வைத்துக்கொண்டால் உங்களை காலி செய்துவிடுவேன் என்று கூடுதலாக சேரக்கப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு தான் காணப்படுகிறது.

வரைபடத்தில் கூறப்பட்டுள்ளவாறு வெற்றிவேந்தன், கிஷோர்குமார், மணிகண்டன் ஆகியோரை சாட்சிய பட்டியலில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். அசா.1 தனது புகார் வாக்குமூலத்தில் மாடை விரட்டி சென்ற போது தான் எதிரிகள் தாக்கியதாக குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் சரிதான். அசா.1 மாடை விரட்டியபோது மாடு முட்டி காயம் ஏற்பட்ட போது எதிரிகளால் காயம் ஏற்படவில்லை என்றாலும் எதிரிகளை பழிவாங்க வேண்டும் என்பதற்காக பொய் புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. வழக்கில் சொல்வது போல் சம்பவம் நடந்திருந்தால் அசா.2 முதல் 8 வரை பிறழ் சாட்சி ஆகியிருக்க மாட்டார்கள் என்றாலும் சம்பவம் உண்மை தான்.

புகார்தாரர் கொடுத்த பொய் புகாரை சரிவர விசாரிக்காமல் எதிரிகள் மீது குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது**

**மறுவிசாரணை இல்லை.**